# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1907/47- 2015 මාර්තු මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.03.26

*1907/47 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*எல். டீ. பீ. 1/2012 (II)*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (தள), (தஏ) மற்றும் (ந) ஆம் பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த அமரவீர,*
*கடற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2015, மாச்சு 25.*

ஒழுங்குவிதிகள்

*1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் ஆழ்கடலில் செயற்படும் மீன்பிடிப் படகுகளுக்கான செய்மதி அடிப்படையிலான கலம் கண்காணிக்கும் முறைமையை (ககமு) நடைமுறைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. ஆளெவரும் ஆழ்கடல் மீன்பிடிச் செயற்பாடுகளுக்காக 10.3 மீ. (34 அடி) அல்லது அதற்கு மேற்பட்ட யாவுமுள்ளிடட நீளத்தைக் கொண்ட மீன்பிடிப் படகுகளை, மீன் வழங்கல் அல்லது மீன் கப்பற் சரக்கு கலங்கள் ree Fers மற்றும் மீன் கொண்டு செல்லும் கலங்கள் வழங்கள் அல்லது கப்பற் சரக்கு கலங்களை, பாய்மர அல்லது காவு கலங்களை (இதனகத்துப் பின்னர் கலங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய கலங்கள் கடற்றொழில் மற்றும் உயிரின வளங்கள் திணைக்களத்தின் (இதனகத்துப் பின்னர் "திணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தரையமமைந்த கடற்றொழில் கண்காணிப்பு நிலையத்தால் (இதனகத்துப் பின்னர் "சநிநி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதாய் அதன் விபரங்கள் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ளன) தடம் பிடிக்கப்படவும், அடையாளம் காணப்படவும் அனுமதிக்கின்ற திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட (இதனகத்தப்பின்னர் "கண்காணிப்பு முறைமைக் கருவி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செய்மதியடிப்படை கலம் கண்காணிப்பு முறைமைக் கருவி அத்தகைய கலங்களில் பொருத்தப்பட்டிருந்தாலொழிய, சேவையிலீடுபடுத்தல், ஆகாது.*

*3. மீன்பிடிக்கலத்தின் தலைவர், பொறுப்பாளர், உரிமையாளர் அல்லது உரிமக்காரர் கலத்திலுள்ள கண்காணிப்புக்கருவி அவர்களின் புவியியல் இடஅமைவு எதுவாகவிருப்பினும் எல்லா நேரங்களிலும் பூரணமாகச் செயற்பாட்டு நிலையில் இருப்பதையும், தேவைப்படும் தகவல்கள் நான்கு மணித்தியாலங்களுக்கொருமுறை அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் மீன்பிடிக் கண்காணிப்பு நிலையத்துக்குப் பொருத்தமானதென்பது அவரால் தீர்மானிக்கப்படும் ஏதாவது கால இடைவெளிகளில் தன்னியக்கமாக அனுப்பப்படுவதையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய தரவுகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்குதல் வேண்டும்:-*

(i) *மீன்பிடிக்கலத்தை அடையாளம் காணுதல் ;*

(அ) *கலத்தின் பதிவு இலக்கம் ;*

(ஆ) சர்வதேச அழைப்பு அடையாளம் ;
(இ) கலத்தின் பெயர் ;
(ஈ) சர்வதேச கடலோர அமைப்பு இல. (கிடைக்குமாயின்) ;
(உ) இந்துசமுத்திர ரியூனா ஆணைக்குழு (இசரிஆ) இல ;.

(ii) 500 மீற்றர்களுக்கு குறைவான இருப்புநிலை வழுவுடன், 99% நிலையான இடைவேளைகளில் மீன்பிடிப் படகின் அப்போதைய புவியியல்சார் இடஅமைவு (தீர்க்கரேகை, அட்சரேகை) ;

(iii) திகதியும், (ii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மீன்பிடிப்படகின் இருப்பு நிலையை நிர்ணயிப்பதற்கு (அனைத்துலக நேரத்தில் சரிநிலைப்படுத்தப்பட்டு எடுத்துரைக்கப்பட்டதாக), நேரமும் ;

(iv) மீன்பிடிக்கலத்தின் வேகமும், செல்திசையும்.

4. (1) திணைக்கத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள "ககநி" யானது ஆழ்கடலிலுள்ள எவையேனும் மீன்பிடிக்கலங்களை அவற்றின் புவியியல் இருப்புநிலை ஏதுவாகவிருந்த போதிலும் இருபத்து நான்கு மணி நேரமும் கண்காணிப்பதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். தானியங்கித் தரவு செயன்முறைப்படுத்தல் மற்றும் இலத்திரனியல் தரவு அலைபரப்பலுக்கென சேவை வழங்குநர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட நன்கு தாபிக்கப்பட்ட கணனி முறைமையொன்றினூடாக தரையமைந்த ககநி நான்கு மணித்தியாலங்களுக்கொருமுறை அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி பொருத்தமானதெனக் கருதும் எவையேனும் காலஇடைவெளிகளில் தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(2) "ககநி"யானது, முறைமை பிழைத்த காலங்களில் ஆதரவு வழங்கக்கூடிய முறையில் பெற்றுக்கொண்ட தகவல்களின் காப்பு மற்றும் மீட்பு வழிமுறைகளை வைத்துப் பேணிவருதல் வேண்டும்.

5. திணைக்களமானது இலங்கை அங்கத்துவமொன்றைக் கொண்டுள்ள பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புக்கு இலங்கை அடையாளக் கொடி கொண்ட மீன்பிடிக் கலங்கள் குறித்த தகவல்களை வழங்கலாம்.

6. "கமுஅ" வானது, திணைக்களத்தின் முகாமைத்துவப் பிரிவின் வேண்டுகோளின் பேரில், குறிப்பேட்டுத் தகவல்களைச் செவ்வைபார்த்தல் மற்றும் அதாவது சட்டவிரோதமான அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடிச் செயற்பாடுகளைக் கண்டறிதல் நோக்கத்துக்காக தரவுகளையும் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. "ககநி"யானது எவையேனும் கலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தரவுகள் பதிவு செய்யப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவொரு காலப்பகுதிக்கு மென்பிரதிகளில் அல்லது வன்பிரதிகளில் பாதுகாத்து வைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

8. "ககநி"யானது, சேவை வழங்குநர்களுடன் ஒன்றிணைவதன் மூலம் பின்வரும் கருமங்களை ஆற்றுதல் வேண்டும் :-

(i) ஒவ்வொரு கலத்திலுமுள்ள கண்காணிப்புக் கருவிகள் முறையாகச் செயற்படுவதையும் மாற்றஞ்செய்யப்படாதிருப்பதையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;

(ii) ஆழ்கடலில் மீன்பிடித்தலில் அல்லது மீன்பிடித்தல் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மீன்பிடிக் கலங்களைக் சகல வேளைகளிலும் கண்காணித்தல் ; மற்றும்

(iii) தரவின் அச்சொட்டாந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

9. கலத்திலுள்ள ஏதேனும் கண்காணிப்புக் கருவி பழுதடைய அல்லது பிழைவழிப்பட நேருமிடத்து கப்பல் தலைவர், பொறுப்பாளர், உரிமையாளர், உரிமக்காரர் அல்லது கப்பற்றலைவரால், பொறுப்பாளரால், உரிமக்காரரால் அல்லது உரிமையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, அவ்வாறு பிழைத்துள்ளமை குறித்து திணைக்களத்தின் "ககநி"க்கு உடனடியாகவே அறிவித்தல் வேண்டுமென்பதுடன், நான்கு மணித்தியாலங்களுக்கொருமுறை அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி பொருத்தமானதெனக் கருதும் கால இடைவெளிகளில் இ- அஞ்சல், தொலைபன்னி, தொலைபேசி அல்லது எஸ் எஸ் பி வானொலி போன்ற கிடைக்கக்கூடிய ஏதாவது தொலைத்தொடர்பு வசதியைப் பயன்படுத்தி திணைக்களத்துக்கு அறிவித்தலும் தேவைப்படுத்தப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் வழங்குதலும் வேண்டும்.

10. கலத்தின் பொருத்தியமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் கருவியின் அத்தகைய தொழில்நுட்பக் கோளாறு அல்லது பிழைவழிப்பட்டமை கண்டறியப்பட்டால், அக்கருவி ஆகக்கூடுதலாக ஒரு மாதக் காலப்பகுதியினுள் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். அல்லது மாற்றீடு செய்யப்படுதல் வேண்டும். திணைக்களத்தின் "ககநி" யைத் திருப்திப்படுத்தும் விதத்தில் பழுதடைந்த கண்காணிப்பு கருவி திருத்தப்பட்டு, நன்கு செய்யப்படும் நிலையத்திலிருந்தாலொழிய தொழில்நுட்பக் கோளாறு அடுத்து மீன்பிடிக்கலம் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லுதல் ஆகாது.

*11.* திணைக்களத்தின் "ககநி" யினால் எழுத்துமூல அதிகாரமளிப்பு வழங்கப்படும்வரை துறைமுகத்திலிருக்கும் போது கண்காணிப்புக் கருவியெதுவும் செயல் நிறுத்தம் செய்யப்படலாகாது. துறைமுகத்துக்கு வந்துசேரும் நேரம் சம்பந்தமாக அதிகாரியிடமிருந்து துறைமுகத்தில் நிறுத்தப்படும் காலம் ஓர் எழுத்துமூல உறுதிப்படுத்துகையும் கல உரிமையாளரிடமிருந்து முன்மதிப்பீட்டுக் காலம் சம்பந்தமான உறுதிப்படுத்துகைக் கடிகமும் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மீளசக்திப்படுத்தலின் பின்னர் தயாரிக்கப்படும் முதலாவது இருப்புநிலை அறிக்கை இறுதி அறிக்கையிலுள்ள கலத்தின் இருப்புநிலை தொடர்பில் வேறுபடுதல் ஆகாது.

*12.* ஒரு கலத்தின் தலைவர் அல்லது பொறுப்பாளர் கலத்தினுள்ள கண்காணிப்புக் கருவி எல்லா நேரங்களிலும் செயற்பாட்டு நிலையில் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்துடன், ஆளெவரும் படகில் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்புக் கருவியை அழித்தலோ, சேதப்படுத்தலோ, செயற்பாடிழக்க வைத்தலோ அல்லது வேறுவிதத்தில் அதில் தலையீடு செய்தலோ ஆகாது என்பதுடன், அத்தகைய செயற்பாடு கண்டிப்பாய் தடை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக,

(அ) கலம் கண்காணிப்பு முறைமை (ககமு) தரவுகளை ஏதேனும் வகையில் மாற்றியமைத்தல் ;

(ஆ) கண்காணிப்புக்கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள உணர் கொம்புக்கு அல்லது உணர் கொம்புகளுக்கு கைப்பாடாக முட்டுக்கட்டையிடுதல் ;

(இ) கண்காணிப்புக் கருவிக்கு ஆன மின்வலு வழங்கலைக் கைப்பாடாக இடைநிறுத்தல் ; மற்றும்

(ஈ) மீன்பிடிக்கலத்திலிருந்து கண்காணிப்புக் கருவியை அகற்றுதல் அல்லது திணைக்களத்தின் "ககநி" யிலிருந்து முன்கூட்டிய அங்கீகாரமின்றி அது நிறுவப்பட்டிருந்த இருப்புநிலையை மாற்றுதல்.

*13.* திணைக்களத்தின் "ககநி" நான்கு மணித்தியால இடைவெளிகளில், அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி பொருத்தமானதெனக் கருதும் ஏதாவது வேறுபட்ட கால இடைவெளிகளில் தரவு, அலை பரப்புகளைப் பெற்றுக்கொள்ளத் தவறினால் அது, அந்நிகழ்வு குறித்து அத்தகைய கலத்தின் தலைவர் அல்லது உரிமையாளர் அல்லது உரிமக்காரர்களுக்கு அல்லது அத்தகைய தலைவரால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவராவது பிரதிநிதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். ஒரு குறித்த கலம் சம்பந்தமாக அத்தகைய நிகழ்வு ஓர் ஆண்டுக்கு மூன்றிற்கு மேற்பட்ட தடவைகள் இடம்பெறுமாயின் திணைக்களத்தின் "ககநி" உபகரணம் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளதா என்பதைத் தாபிக்கும் பொருட்டு கருவிமீது அலுவலக முறையான செவ்வைபார்த்தல் உட்பட விசாரணையொன்றை நடத்துதல் வேண்டும்.

*14.* ஒரு கலத்தின் பொறுப்பாளர் அல்லது தலைவர் கண்காணிப்புக் கருவிமூலம் மற்றும் அதன் "ககநி" கண்காணிப்போர் மூலமும் –

(அ) நீர்ப்பரப்புகள் மற்றும்மூலவளங்களை அணுகுதல் மீதான குறிப்பான விதிகள் ஏற்புடைத்தாக்கும் ஏதேனும் கடல்சார் பிரதேசங்களுள் ;

(ஆ) பிராந்திய கடற்றொழில் கடலோர அமைப்பின் ஏதேனும் ஒழுங்கேற்பாட்டுப் பிரதேசங்களுள் ;

(இ) வேறு ஏதாவது அரசின் நியாயாதிக்க நீர்ப்பரப்புகளுள் ;

(ஈ) திணைக்களத்தினால் பெயர்குறிப்பிடப்படக்கூடிய வரையறுக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்படாத வேறு ஏதாவது பிரதேசத்துள்.

நுழையும் மற்றும் அங்கிருந்து வெளியேறும் திகதி மற்றும் நேரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

*15.* ஏதேனும் கடல்சார் பாதுகாப்புப் பிரதேசம் அல்லது வேறுவகையில் மீன்பிடி மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு மிக அண்மையில் இருபது மைல்கள் பிரதேசம் வரை செயற்படும் ஏதேனும் கலம், ஒரு மணித்தியால இடைவேளைகளில் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி பொருத்தமானதெனக் கருதும் அவரால் தீர்மானிக்கப்படும் வேறு ஏதேனும் கால இடைவேளைகளில் அவர்கள் அத்தகைய அண்மையில் தொடர்ந்திருப்பது பற்றி அறிக்கையிடத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*16.* "ககநி" கலம் இடைத்தரித்தல் செயற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். இடைத்தரித்தல் புரியும் ஏதேனும் கலம் பிரத்தியேக பொருளாதார வலயப் பிரதேசங்களுள் பிரவேசித்தல் மற்றும் அவற்றை விட்டு நீங்குதல் பற்றிய திகதியையும், நேரத்தையும் திணைக்களத்தின் "ககநி"க்கும் இடைத்தரித்தல் செல்வழி சொந்தமான, இயைபான நாட்டின் அதிகாரிகளுக்கும் அறிவித்தல் வேண்டும்.

*17.* கலம் கண்காணிப்பு தரவுத்தளத்துக்கான அணுக்கமானது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அது சார்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். கலக்கண்காணிப்புத் தரவுத் தளத்தின் பதிவேடுகளுக்கு அணுக்கம் கொண்டுள்ள ஒவ்வொரு பதவியணி உறுப்பினரும் இவ்வொழுங்குவிதியின் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறு, கலத்தின் இருப்பு நிலையை பயன்படுத்துதல் மற்றும் வெளிவிடுதல் மீதான மட்டுப்பாட்டு வெளிப்படுத்துகைக்கு கையொப்பமிடுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

18. "ககநி"க்குப் பொறுப்பான அலுவலர் கலங்களின் கண்காணிப்புக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய தரவுகளைப் பாதுகாப்பாகப் பூட்டி வைத்திருத்தலும் வேண்டும். கலம் கண்காணிப்புத் தகவல்களும், தரவுகளும் திணைக்களத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். அத்துடன் பணிபாளர் தலைமையதியின் எழுத்துமூல அனுமதியின் கீழன்றி அத்தகைய எந்தத் தரவுகளும் வெளிவிடப்படுதல் ஆகாது.

19. திணைக்களத்தினால் எழுத்துமூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட, அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநரிடமிருந்து மாத்திரமே செய்மதிக் கருவிகள் அல்லது கலக் கண்காணிப்பு முறைமை (ககமு)க்கான ஏதேனும் உபகரணம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

20. இவ்வொழுங்குவிதிகள். யாவுமுள்ளிட்ட 10.3 மீ (34 அடி) நீளம் அல்லது அதற்குக் கூடுதலான நீளங்கொண்ட ஏதேனும் மீன்பிடிக் கலத்துக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

21. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருளாகும் ;

"ஆழ்கடல் மீன்பிடிச் செயற்பாடுகள்" என்பதன் பொருள், பிரத்தியேக பொருளாதார வலயத்துக்கு (200 கடல் மைல்கள்) அப்பாலும் மற்றும் வேறு ஏதாவது அரசின் தேசிய நியாயாதிக்க நீர்ப்பரப்புக்கப்பாலும் இடம்பெறும் மீன்பிடிச் செயற்பாடு எனப் பொருளாகும் ;

"மீன்பிடி தொடர்பான செயற்பாடுகள்" என்பது, தரையிறக்குதல், பொதியிடுதல், பதனிடல், இதற்கு முன்னர் துறைமுகமொன்றில் தரையிறக்கப்படாத மீன்களை கப்பல் மாற்றியேற்றுதல், இடம்பெயர்த்தல் மற்றும் கடலில் ஆளணியினர், எரிபொருள், துணைப்பொருட்கள் மற்றும் ஏனைய வளங்களை ஏற்பாடு செய்வதற்கு ஆதரவான அல்லது ஆயத்தம் செய்வதான ஏதேனும் தொழிற்பாடு எனப் பொருளாகும் ;

"சட்டவிரோதமான அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல்" என்பது, இந்து சமுத்திர ரீயூனா ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14எ ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட (தீர்மானம் 11/ 03 இன் மூலம் விலக்கப்பட்ட) தீர்மானம் 09/03 இன் 1 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளை குறிப்பீடு செய்கின்றது.

"துறைமுகம்" என்பது, கரைகடந்த முடிவிடங்களும் மற்றும் தரையிறங்குதல், கப்பல் மாற்றியேற்றுதல், மற்றும் தரையிறங்குதல், பொதியிடல், பதனிடல், எரிபொருளிடல் மற்றும் மீள்வழங்கல்களுக்கான வேறு நிறுவுகைகளை உள்ளடக்கும் ;

"கலம்" என்பது, மீன்பிடித்தலுக்காக அல்லது மீன்பிடித்தலுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற, பயன்படுத்தப்படுவதற்குச் சாதனம் பொருத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் கலம், கப்பல், அல்லது படகு என்று பொருளாகும்.

(2 ஆவது ஒழுங்குவிதிகள்)

## I ஆவது அட்டவணை

இலங்கை கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கலக் கண்காணிப்பு நிலையம் (FMC) பற்றிய தகவல்

| | |
|---|---|
| பெயர் | : |
| முகவரி | : |
| தொலைபேசி இல. | : |
| ரெலக்ஸ் இல. | : |
| தொலைநகல் இல. | : |
| மின்னஞ்சல் | : |

*(17 ஆவது ஒழுங்குவிதிகள்)*

## II ஆவது அட்டவணை

*படகு நிலைகொள்ளும் நிலை பற்றிய தகவல்களை பயன்படுத்தல் மற்றும் வெளியிடுகையின் வரையறை பற்றிய அத்தாட்சிப்படுத்தும் படிவம்*

*உறுதிப்படுத்தல்*

*கீழே கையொப்பமிட்ட ................................................. ஆகிய என்னால் கலக் கண்காணிப்பு முறைமையின் (VMS) மூலம் எனக்கு கிடைக்கக்கூடியதான யாதேனும் அல்லது தகவல்களை இரகசியகமாக வைத்திருப்பேன் எனவும் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் கடிதத்தின் மூலம் அதிகாரம்வழங்கப்பட்ட நபரைவிட வேறு யாரேனும் அல்லது யாரேனும் இரண்டாவது தரப்பினருக்கு/தரப்பினர்களுக்கு வழங்குவதை தவிர்த்துக் கொள்வேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.*

*அலுவலரின் கையொப்பம்* :

*அலுவலரின் பெயர்* :

*பதவி* :

*தேசிய ஆள் அடையாள அட்டை இல.* :

*4- 396/1*

---

*எல். டீ. பீ. 1/2012 (II)*

### *1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்*

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(ஔ) மற்றும் (ந) ஆம் பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த அமரவீர,*
*கடற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2015, மாச்சு 25.*

ஒழுங்குவிதிகள்

*1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் சட்ட விரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தரையிடப்படுத்துவதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகளை அமுலாக்குதல் ஒழுங்குவிதிகள் எடுத்துக் காட்டப்படலாம்.*

*2. (1) ஆளெவரும் இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி வெளிநாட்டு மீன்பிடிப் படகொன்றினால் இலங்கையின் நீர்ப்பரப்புகளுக்கு வெளியே பிடிக்கப்பட்ட மீனைத் தரையிறக்குதலோ, கப்பல் மாற்றியேற்றுதலோ, பொதியிடுதலோ அல்லது பதனிடுதலோ அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையின் ஏதேனும் துறைமுகத்தில் அத்தகைய படகுகளுக்கு மீள் வழங்குகை, பேணுகை மற்றும் கப்பல் சீரமைத்தல் போன்ற சேவைகளைப் பெறுதல் ஆகாது.*

*(2) ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகள், இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழுவினால் பெயர்குறித்து வெளிப்படுத்தப்பட்ட ஒரு துறைமுகத்தில் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையின் ஏதேனும் துறைமுகத்தில் தவிர, இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்தில் நிறைவேற்றப்படுவதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பணிப்பாளர் தலைமையதிபதி எடுத்தல் வேண்டும்.*

*3. இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட உரிமத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கொடியுரிமை நாட்டினால் வழங்கப்பட்ட படகுப் பதிவு, கொடியுரிமை நாட்டினால் அல்லது ஏதேனும் கரைகொண்ட அரசினால் வழங்கப்பட்ட ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான*

அதிகாரவளிப்புச் சான்றிதழ், இதற்கான அட்டவணை II இலான முன்கூட்டிய வெளிப்படுத்துகை மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கோரப்படும் வேறேதேனும் ஆவணம் என்பவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடனும் பத்தாயிரம் ரூபா கொண்ட ஒரு கட்டணத்துடனும் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

4. இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பமொன்று, படகானது முதற்றடவையாகப் பெயர் குறிக்கப்பட்ட துறைமுகத்தினுள் பிரவேசிப்பதற்கு முன்னர் ஆகக்குறைந்தது நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்கு முன்கூட்டியும் மற்றும் துறைமுகத்துக்கான நேரத் தொலைவு இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குக் குறைவாகவிருப்பின், பெயர் குறிக்கப்பட்ட துறைமுகத்துக்கு அத்தகைய படகானது மீளப்பிரவேசிப்பதற்கு முன்னர் அல்லது மீன்பிடிச் செயற்பாடு முடிவுற்றதன் உடனடுத்து பின்னரான இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்கு முன்கூட்டியும் செய்யப்படுதல் வேண்டும்.

5 (1) உரிமமானது, பொருளளவில், மீனைத் தரையிறக்குவதற்காகவும் கப்பலில் மாற்றியேற்றுவதற்காகவும், பேணுகைக்காகவும், கப்பல் சீரமைத்தற்காகவும் துறைமுக சேவைகளுக்காகவும் முறையே அட்டவணை III இன் பாகம் I, II, III என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்.

(2) 5 (1) ஆம் ஒழுங்குவிதியில் இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உரிமம் ஒவ்வொன்றும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழுவினாலும் துறைமுக அரசு வழிமுறைகள் உடன்படிக்கையினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயைபான தீர்மானங்களுக்கு இசைந்தொழுகியும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைந்தனவாகவிருத்தலும் வேண்டும்.

6. உரிமம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், இவ்வொழுங்குவிதியினாலும் அதன் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தினாலும் விதிக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கு மேலதிகமாக உரிமத்தின் கீழ் செயலாற்றும்போது 1948 இன் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தினதும் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

7. பெயர் குறித்துரைக்கப்பட்ட துறைமுகத்தினுட் பிரவேசிப்பதற்கு நாடுகின்ற படகு, குறிப்பாக சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத (இதனகத்துப் பின்னர் சஅஒ மீன்பிடித்தல் எனக் குறிப்பீடு செய்யப்படும்) மீன்பிடித்தலில் அல்லது அத்தகைய மீன் பிடித்தலுடன் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்து கலங்களின், பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிரலிலுள்ள படகு, சஅஒ மீன்பிடித்தல் தொடர்பான செயற்பாடுகளில் அல்லது அத்தகைய மீன்பிடித்தலுக்கு ஆதரவாக அது ஈடுபட்டுள்ளதென நம்புவதற்குப் போதுமான சான்றுள்ளபோது, பெயர் குறிக்கப்பட்ட துறைமுகத்தினுள் பிரவேசிப்பதனை அவர் மறுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய முடிபு படகின் கொடியுரிமை நாட்டுக்கும், எந்தக் கரைகொண்ட நாட்டில் மீன்பிடித்தல் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்தக் கரைகொண்ட நாட்டுக்கும், படகின் தலைவர் எந்த அரசின் நாட்டவராக உள்ளாரோ அந்த நாட்டின் அரசிற்கும் மற்றும் இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

8. துறைமுகத்தினுட் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வெளிநாட்டுப் படகும், இதற்கான அட்டவணை IV இலுள்ள நடவடிக்கைமுறைக்கிணங்க அந்நோக்கத்துக்காக அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட தமைமைபெற்ற சோதனையாளர்களினால் சோதனையிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட படிமுறையில் துறைமுகச் சோதனை பற்றிய அறிக்கையைப் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி ஏற்றுக்கொள்ளப்பட்ட இயைபான தீர்மானங்களுடன் இசைந்தொழுக துறைமுகச் சோதனை அறிக்கையைக் கொடியுரிமை நாட்டுக்கும் இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழுவுக்கும் அனுப்புதல் வேண்டும்.

9. சோதனைக்கு அமைந்ததாகவுள்ள ஏதேனும் படகின் தலைவர், பொறுப்பாளர், அல்லது கப்பற்குழு முதல்வர் சோதனை நடவடிக்கை முறையை முறையை நிறைவேற்றுவதில் சோதனையாளருடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

10. சோதனையாளர், அத்தகைய கலத்தின் பயணம் தொடர்பிலும் மீனின் தரம் குறையாதிருக்கின்றமை தொடர்பிலும் குறைந்தபட்சத் தலையீட்டையும் வசதியீனத்தையும் உறுதிப்படுத்துவதற்காக ஏதேனும் சோதனையை நிறைவேற்றும் போது ஏதேனும் தகாத தாமதத்தைத் தவிர்த்தல் வேண்டும்.

11. படகின் தொடர்பாடல் முறைமை, இலங்கைக் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களத்தின் கண்காணிப்புக் கட்டுப்பாட்டு மேற்பார்வைக் கூறின் வானொலி அலைகளுடன் இணைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு படகும், கொடிக்குரிய அரசின் துறைமுகத்தின் மத்திய நிலை முறைமையுடன் இணைக்கப்பட்ட ஓர் அலைவாங்கி செலுத்தியைக் கொண்டு செல்லுதலும் வேண்டும்.

12. படகின் தலைவர், பொறுப்பாளர் அல்லது கப்பற்குழு முதல்வர், மீன்பிடித் தரவு சேகரித்தல் ஒழுங்குவிதி பேணப்படும் குறிப்பேடு மற்றும் இதற்கான அட்டவணை VI இல் தரப்பட்டுள்ள படிமுறைக்கிணங்க, மீன்பிடி இடம்பெற்றுள்ள புவியியல்சார் அமைவிடத்துடன் ரியூனா மீன்பிடி மற்றும் ஒத்த இனங்கள் பற்றிய தரவின் பிரதியையும் கடலில் கப்பல் மாற்றியேற்றுதலொன்று இடம்பெற்றிருப்பின் கப்பல் மாற்றியேற்றுதல் வெளிப்படுத்துகையையும் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

*13.* இரண்டாம் ஒழுங்குவிதிக்கிணங்க வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் ஒரு வெளிநாட்டு மீன்பிடிப் படகொன்றினால் தரையிறக்கப்பட்ட ரியூனா மற்றும் ஒத்த மீன்களின் மொத்த எடையின் பத்து சதவீதம் (10%) இலங்கைக் கடற்றொழிற் கூட்டுத்தாபனத்தினால் உடன்பட்டுக் கொள்ளப்படவேண்டிய ஒரு விலையில் கொள்வனவு செய்யப்படுவதற்காக அத்தகைய கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும். ரியூனா மீனின் மொத்த எடையின் மேற்கூறப்பட்ட பத்து சதவீதம், உடனான ரியூனாவின் ஐந்து சதவீதத்தையும், (5%) உறைந்த ரியூனாவின் ஐந்து சதவீதத்தையும் (5%) கொண்டிருத்தல் வேண்டும்.

*14.* பேர்வலு அல்லது இடுக்கண் என்ற காரணங்களுக்காகச் சர்வதேசச் சட்டத்துக்கிணங்க ஏதேனும் படகு துறைமுகத்தினுட் பிரவேசிப்பதனை இவ்வொழுங்குவிதி பாதித்தலாகாது. அதற்கிணங்க, கப்பற்றொகுதியினரின் காப்புக்கு அல்லது உடனலத்துக்கு அல்லது படகின் காப்புக்கு அத்தியாவசியமான துறைமுகச் சேவைகளின் பயன்பாடு ஒரு கலத்துக்கு மறுக்கப்படுதலாகாது. ஆயின், இத்தேவைகள் உரியமுறையில் எண்பிக்கப்படுதல் வேண்டும் அல்லது கலத்துக்கான உடனடி ஆபத்து ஏற்படும் உறுகண் இருத்தலும் வேண்டும்.

*15.* இவ்வொழுங்குவிதிகளில் -

"மீன்பிடித்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள்" என்பது, ஒரு துறைமுகத்தில் முன்னர் தரையிறக்கப்படாதுள்ள மீனைத் தரையிறக்குதல், பொதியிடுதல், பதனிடுதல், கப்பல் மாற்றியேற்றுதல் அல்லது இடம்பெயர்த்தல் என்பனவும் கடலில் ஆளணியினர், மீன்பிடிப்பொறி மற்றும் ஏனைய வழங்குகைகளை வழங்குதலும் உட்பட, மீன்பிடித்தலுக்கு ஆதரவளிப்பதற்கான அல்லது அதனை ஆயத்தஞ் செய்வதிலான ஏதேனும் செயற்பாடு என்று பொருளாகும்;

"சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல்" என்பது, இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14எ ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட (தீர்மானம் 11/03 இன் மூலம் விலக்கப்பட்ட) தீர்மானம் 1 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளைக் குறிப்பீடு செய்கின்றது ;

"பெயர்குறிக்கப்பட்ட துறைமுகம்" என்பது, மீனைத் தரையிறக்குதல், கப்பல் மாற்றியேற்றுதல், பொதியிடுதல், பதனிடுதல், படகுக்கு மீள எரிபொருள் வழங்குதல், அல்லது மீள் வழங்குகைகளை அளித்தல் என்பவற்றுக்கானவையும் மற்றும் துறைமுக அரசினால் பிரசித்தப்படுத்தப்படுவதற்காக இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்டவையுமான கரைகடந்த முடிவிடங்களையும் ஏனைய நிறுவுகைகளையும் உள்ளடக்கும் ;

"படகு" என்பது, மீன்பிடித்தலுக்காக அல்லது மீன்பிடித்தலுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற, பயன்படுத்தப்படுவதற்குச் சாதனம் பொருத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் கலன், கப்பல் அல்லது படகு என்று பொருளாகும்.

(3 ஆவது ஒழுங்குவிதிகள்)

## I ஆவது அட்டவணை

இலங்கையில் பெயர் குறிக்கப்பட்ட அல்லது பிரகடனப்படுத்தப்பட்ட துறைமுகம் ஒன்றில் வெளிநாட்டுப் படகு ஒன்றின் மூலம் மீன்களைத் தரையிறக்குவதற்கு/மீள் கப்பலேற்றுவதற்கு/பராமரிப்பு மற்றும் துறைமுகத்தில் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் தேசிய முகவர்/கம்பனி சம்பந்தமான தகவல் :

| | | | |
|---|---|---|---|
| அ. | முழுப்பெயர் : | ஆ. | முகவரி : |
| இ. | தொ. பேசி. இல. : | ஈ. | தொ. நகல் இல. : |
| உ. | மின்னஞ்சல் : | ஊ. | முதலீட்டு சபையின் பதிவு இலக்கம் : |

2. மீன்பிடிப் படகுக்குரிய வெளிநாட்டு முகவர்/கம்பனி சம்பந்தமான தகவல் :

| | | | |
|---|---|---|---|
| அ. | முழுப்பெயர் : | ஆ. | முகவரி : |
| இ. | தொ. பேசி. இல. : | ஈ. | தொ. நகல் இல. : |
| உ. | மின்னஞ்சல் : | ஊ. | முதலீட்டு சபையின் பதிவு இலக்கம் : |

3. துறைமுகத்துக்குள் நுழைவதற்கு அவசியமான காரணம் :

அ. மீன் தரை இறக்குவதற்கு ☐ ஆ. மீன் கப்பல் ஏற்றல் ☐ இ. பராமரிப்பு மற்றும் சேவை பெறுவதற்கு ☐

4. வெளிநாட்டு படகு சம்பந்தமான தகவல் :

| | |
|---|---|
| அ. படகின் பெயர் : | ஆ. படகுக்கு உரிய கொடிக்குரிய அரசு : |
| இ. படகின் பதிவிலக்கம் : | ஈ. படகின் பதிவு செல்லுபடியாகும் கால எல்லை : |
| உ. இந்து சமுத்திர டூனா ஆணைக் (IOTC) அனுமதி இல. : | ஊ. இந்து சமுத்திர டூனா ஆணைக்குழு (IOTC) அனுமதி வழங்கப்பட்ட கால எல்லை |
| எ. மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கிய அரசு | ஏ. மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கால எல்லை : |
| ஐ. வானொலி சமிக்ஞை: | ஒ. சர்வதேச சமுத்திர நடவடிக்கை சம்பந்தமான அமைப்பு (IMO) இல. |
| ஓ. படகு ஆரம்பத்தில் புறப்பட்ட துறைமுகம் : | ஔ. கடைசி முறையாக அருகில் இருக்கும் துறைமுகம் |

5. படகு சம்பந்தமான விபரம் :

| | | | |
|---|---|---|---|
| அ. மொத்த நீளம் : | ஆ. நீரில் மூழ்கும் : அளவு | (இ) அகலம் : | ஈ. கொட்டு தயாரித்த மூலப்பொருள் |
| உ. அண்ணளவான நிறை | ஊ. நிகர நிறை | எ. மீன்பிடி உபகரணம் | ஏ. குளிரூட்டும் தொகுதி |
| ஐ. படகில் உள்ள உபகரணங்கள் | ஒ. கலக்கண்காணிப்பு தொகுதி (VMS) | | |

6. படகு உள்ள பணிக்குழுவினர் பற்றிய தகவல் :

| பெயர் | இனம் | தொழில் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| மொத்தம் | | |

7. மீளக் கப்பலேற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் பெறுவற்கான தகவல் :

(அ) மீளக் கப்பலேற்றுவதற்கான திகதி :

(ஆ) மீன்பிடிக்கப்படும் பூகோள அமைவிடத்திலிருந்து ஆரம்பித்தல் :

(இ) கொண்டு செல்லப்படும் படகு சம்பந்தமான விபரம் :

| | |
|---|---|
| அ. கொண்டு செல்லப்படும் படகின் பெயர் : | ஆ. படகுக்கு உரிய கொடிக்குரிய அரசு : |
| இ. படகின் பதிவிலக்கம் : | ஈ. படகின் பதிவு செல்லுபடியாகும் கால எல்லை : |
| உ. இந்து சமுத்திர டூனா ஆணைக்குழு (IOTC) அனுமதி இல. : | ஊ. இந்து சமுத்திர டூனா ஆணைக்குழு (IOTC) அனுமதி வழங்கப்பட்ட கால எல்லை |
| ஐ. வானொலி சமிக்ஞை குறியீடு : | ஒ. சர்வதேச சமுத்திர நடவடிக்கை சம்பந்தமான அமைப்பு (IMO) இல. |
| ஓ. கொடிக்கு உரிய அரசின் படகு நங்கூர மிடும் உள்நாட்டு துறைமுகம் | ஔ. கடைசி முறையாக அருகில் இருக்கும் துறைமுகம் |

(ஈ) மீளக் கப்பலேற்றுவதற்கான மீன் இனங்கள் உற்பத்தி வகை சம்பந்தமான விபரம் :

| மீன் இனங்கள் | உற்பத்தியின் வகை (மொத்த, குடல் அகற்றப்பட்டவை, தலை அகற்றப் பட்ட, துண்டுகளாக்கப்பட்ட *(Whole, gutted, filleted)* | தொகை (தொன்னில்) |
|---|---|---|
| மஞ்சள் கோடு கெலவல்ல (Yellowfin tuna) | | |
| கிளாவாலை (Bigeye tuna) | | |
| பலயா (சூரை) (Skipjack tuna ) | | |
| கொப்பரன் (Marlin ) | | |

8. பராமரிப்பு மற்றும் துறைமுக சேவையைப் பெறுவதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தகவல் :

(அ) தேவைப்படும் சேவை :

(i) மீண்டும் எரிபொருள் நிரப்பல் :.................................................................
(ii) மீள சேவை வழங்கல் நீர் /பனிக்கட்டி/இரை /உணவு ....../ ......../. ........./.........
(iii) தேவைப்படும் பராமரிப்பு நடவடிக்கை - இயந்திரம் /புரோபெலர் படகின் பராமரிப்பு நடவடிக்கைக்காக நீர் அகற்றுதல்

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும், சரியானதுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.................................
கையொப்பம்.

திகதி :..................

(3 ஆவது ஒழுங்குவிதிகள்)

## II ஆம் அட்டவணை

படகு ஒன்று துறை முகத்துக்குள் நுழையும் போது வழங்க வேண்டிய தகவல்கள்

| | |
|---|---|
| 1. நுழைவதற்கு எதிர்பார்க்கும் துறைமுகம் | |
| 2. துறைமுக அரசு | |
| 3. வருவதற்கு எதிர்பார்க்கும் திகதி மற்றும் நேரம் | |
| 4. நோக்கம் | |
| 5. கடைசியாக தரையிறங்கிய துறைமுகம் மற்றும் திகதி | |
| 6. படகின் பெயர் | |
| 7. கொடிக்கு உரிய அரசு | |
| 8. படகின் வகை | |
| 9. சர்வதேச வானொலி சமிக்ஞை | |
| 10. படகுடன் தொடர்புபடுத்தும் சம்பந்தமான தகவல் | |
| 11. படகின் உரிமையாளர்/உரிமையாளர்கள் | |
| 12. பதிவுச் சான்றிதழின் இல. | |
| 13. படகின் சர்வதேச செய்மதி அமைப்பின் பதிவு இலக்கம் இருப்பின் | |
| 14. வேறு பதிவுகள் இருப்பின் | |
| 15. இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவை இனம் காணும் இல. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. படகு கண்காணிப்பு தொகுதி | இல்லை | உண்டு: உள்நாடு | உண்டு : வலய கடற் அமைப்பு | வகை |
| 17. படகின் விபரம் | நீளம் | அகலம் | நீரில் தாழும் அளவு | |

| | |
|---|---|
| 18. படகின் தலைவர் அல்லது படகு ஓட்டியின் பெயர் மற்றும் இனம் : | |
| 19. தொடர்புடைய கடற்றொழில் அதிகார சபை திணைக்களம் | |

| பரிசீலனை செய்யும் அலுவலர் | வழங்கப் பட்டவை | செல்லுபடி யாகும் காலம் | கடற்றொழில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்ட பிரதேசம் | மீன் இனங்கள் | மீன்பிடி உபகரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

| | |
|---|---|
| 20. தொடர்புடைய மீனக் கப்பலேற்றும் அதிகார சபை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பரிசீலனை செய்த அலுவலர் | | வழங்கப்பட்டவை | | கால எல்லை | |
| பரிசீலனை செய்த அலுவலர் | | வழங்கப்பட்டவை | | கால் எல்லை | |

| | |
|---|---|
| 21. மீன் கப்பல் ஏற்றுவதற்காக மீன் வழங்கும் படகின் | |

| திகதி | இடம் | பெயர் | கொடிக்கு உரி அரச | அடையாள அட்டை இல. | மீன் மீன் இனங்கள் | மீன் உற்பத்தி | மீன் பிடித்த பிரதேசம் | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |

| | | | |
|---|---|---|---|
| 22. படகில் உள்ள மொத்த மீன்களின் தொகை | | 23. தரை இறக்குவதற்கான மீன்களின் தொகை | |

| மீன் இனங்கள் | உற்பத்தி விடயம் | மீன்பிடித்த பிரதேசம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

(5 ஆவது ஒழுங்குவிதிகள்)

## III ஆவது அட்டவணை

I ஆம் பகுதி

### இலங்கையில் இனம் காணப்பட்ட மற்றும் பிரகடனப்படுத்தப்பட்ட துறைமுகத்தில் வெளிநாட்டு மீன் பிடிப்படகு ஒன்றின் மூலம் மீன்களைத் தரையிறக்குவதற்கான அனுமதிப்பத்திரம்

1. ..................................................... இல் வதியும் ........................................................................ என்பவருக்கு இலங்கைக்கு உரிய நீர்ப்பரப்பிற்கு வெளியே பிடிக்கப்பட்ட மீன்களை ............................................ எனும் பதிவு இலக்கம் கொண்டதும்................................................................ (கொடிக்கு உரிய அரசினால்/கரையோர அரசினால் மீன்பிடி நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம்) மூலம் வழங்கப்பட்டதுமான ஆழ் கடலில் மீன்பிடி நடவடிக்கை அனுமதிப்பத்திரம்..................... எனும் இலக்கம் ....................................... கொண்டதும்.............. (இந்துனேசியா/தாய்வான்) மீன்பிடிப்படகின் மூலம் இலங்கையின் திக்கோவிட்ட கடற்றொழில் துறைமுகத்தில் மீன்களைத் தரையிறக்குவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2. இந்த அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட நபரினால் மட்டுமே பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன், அதனை வேறு எந்த ஒரு நபருக்கும் கைமாற்றப்படுதல் ஆகாது.

3. இந்த அனுமதிப்பத்திரம் ஏற்கனவே இரத்துச் செய்யப்படாவிடின், மீன்பிடிப்பதற்கான ஒரு பயணத்தின்போது ஒரு முறை பிடிக்கப்படும் மீன்களை தரையிறக்குவதற்கு 201................ ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்துக்கு மட்டும் செல்லுபடியாதல் வேண்டும்.

4. இந்த அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் தரையிறக்கப்படும் இலங்கைக்கு உரிய நீர்ப்பரப்பிற்கு வெளியே பிடிக்கப்படும் ஏதேனும் அல்லது மீன்களை, துறைமுகு அரசின் ஒழுங்குவிதியின் 2014 ஆம் ஆண்டின் 3 ஆவது நியதிகளின் கீழ் இந்த விடயத்துக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் அன்றி துறைமுகத்தில் உள்ள ஏதேனும் அல்லது தேசிய மற்றும் வெளிநாட்டு மீன்பிடிப் படகு ஒன்றைப் பயன்படுத்தி மீளக் கப்பலேற்றும் நடவடிக்கையை மேற் கொள்ளுதல் ஆகாது.

5. இந்த அனுமதிப்பத்திரம் துறைமுக அரசுடன் நடவடிக்கை மேற்கொள்வது சம்பந்தமாக 2015 ஆம் ஆண்டின் ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழும் அமைதல் வேண்டும்.

### மீன்களைத் தரையிறக்குவதற்கான நிபந்தனைகள்

1. இந்த அனுமதிப்பத்திரம் 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்க ஒழுங்குவிதியின் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்.

2. பிடிக்கப்பட்ட மீன் இலங்கையின் அண்ணியப் பொருளாதார வலயத்துக்கு அப்பால் இருந்து கொண்டு வந்ததாக இருத்தல் வேண்டும். அத்துடன் படகு பெயர் குறிப்பிடப்பட்ட துறைமுகத்துக்குள் நுழையும் போது அப்படகில் உள்ள உபகரணம் பாதுகாப்பாக முறையாக அடுக்கி பார்வைக்குப் புலப்படாத வகையில் மூடி வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் இதற்குப் பின்னர் இலங்கைக்குரிய அண்ணியப் பொருளாதார வலயத்துக்குள் மீன்பிடிப்பதை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.

3. கடற்றோழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் (DFAR) மூலம் குறிப்பிடப்பட்ட துறைமுக பரிசோதகருக்கு, கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனத்தின் (CFHC) முகாமையாளருக்கு, கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடற் படை அலுவலருக்கு அம் மீன்பிடிப்படகினை பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் உண்டு.

4. படகின் வானொலி அழைப்புத் தொகுதியை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கண்காணிப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கை (MCS) அலகின் வானொலி தொடர்பு கிளையுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டியதுடன், இனம் காணப்பட்ட கொடிக்குரிய அரசிற்குள் நுழையும் தொகுதி மற்றும் தொடர்புடைய ரான்ஸ்பொன்டர் உபகரணம் படகுடன் கொண்டு செல்லல் வேண்டும்.

5. இந்த அனுமதிப்பத்திரத்தின் கீழ் தரையிறக்கப்படும் மீன்கள் சம்பந்தமாக அது தரையிறக்கும் சந்தர்ப்பத்தில் மீன் இனங்கள் ரீதியாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு மற்றும் துறைமுக முகாமையாளருக்கு அறிக்கைப்படுத்தல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் தொடர்பாக வெளியிடப்பட்ட பாதுகாப்பின் தேவைக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

7. துறைமுகத்தின் சமுத்திர சூழல் பகுதியில் எதுவித மாசுப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபடுதல் ஆகாது.

8. படகு புறப்படும் துறைமுக கொடிக்குரிய அரசு அல்லது துறைமுக அரசு ஏற்றுக்கொள்ளப்பட்ட துறைமுகமாக இருத்தல் வேண்டும்.

9. கடற் பறவைகள், கடல் ஆமை, திரஷர் சுறா, தென்னோலை சுறா போன்றவற்றின் முழுமையாக இறந்த அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியை அல்லது வேறு எந்த சுறா இனங்களின் தசைகளின் அகற்றப்பட்ட பாகங்களை தரையிறக்கல், விற்றல் அல்லது விற்பதற்காக காட்சிப்படுத்தல் போன்ற நடவடிக்கை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

10. படகுதி தரித்து நிற்பதற்கான கட்டணம் முதலாவது ஒழுங்கு விதியின் அதிகாரத்தின் கீழ் வெளிநாட்டு மீன்பிடிப்படகு ஒன்றின் மூலம் தரையிறக்கப்படும் டூனா இன மீன்களுக்கு இலங்கை மீன்பிடிக்கூட்டுத்தாபனத்தின் மூலம் அறவிடப்படும் 10மு மிகை அறவீடாக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்குவதற்கு அந்தக் கம்பனி உடன்படுதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட டூனா மீன்களின் தொகையில் ஈரப் பதத்துடன் 5% அல்லது குளிரூட்டப்பட்ட டூனா 5% மாகவும் இருத்தல் வேண்டும்.

11. தரையிறக்கப்படுவதற்கான பற்றுச்சீட்டு (Bill of lading) உடன் வெளிநாட்டு மீன்பிடிப் படகில் உள்ள மீன் வர்த்தக துறைமுகமொன்றில் தரையிறக்கும் போது இந்த நிபந்தனைகள் ஏற்புடையதன்று.

## II ஆம் பகுதி

### இலங்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட மற்றும் பிரகடனப்படுத்தப்பட்ட துறைமுகத்தில் வெளிநாட்டு மீன்பிடிப்படகு மூலம் தரையிறக்கப்படும் மீன்களை மீள் கப்பலேற்றுவதற்கான அனுமதிப்பத்திரம்

1. .................................................... (முகவரி) இல் வதியும் ........................................................................ (விண்ணப்பதாயின் பெயர்) என்பவருக்கு ........................... எனும் இலக்கம் கொண்ட ........................... (பெயர்) பெயருடைய (இந்துனேசியா/ தாய்வான்/ஜப்பான்/சீனா) படகிற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட இல. ................. (அனுமதிப்பத்திர இலக்கம்) கொண்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் இலங்கையின் திக்கோவிட்ட கடற்றொழில் துறைமுகத்தில் தரையிறக்கப்பட்ட, டூனா மற்றும் டூனா வகை மீன்களை கீழ் குறிப்பிடப்படும் I ஆம் அட்டவணையின் மூலம் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களுக்கு அமைய மீளக் கப்பலேற்றுவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2. இந்த அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட நபரினால் மட்டுமே பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன், வேறு எந்த ஒரு நபருக்கும் இதனைக் கைமாற்றப்படுதல் ஆகாது.

3. இந்த அனுமதிப்பத்திரம் ஏற்கனவே இரத்துச் செய்யப்படாவிடின், 2015/................. ஆம் ஆண்டு முதல் ஆரம்பமாகும் 201................ ஆந் திகதிவரை ....................... வருட காலத்துக்கு மட்டும் செல்லுபடியாதல் வேண்டும்.

4. ஏற்றப்படுவதற்கான ஆவணம் ஒன்றுடன் வெளிநாட்டு மீன்பிடிப்படகினால் வர்த்தக துறைமுகம் ஒன்றில் தரையிரக்கப்படும் மீன்கள் மற்றும் பொதிகள் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் மீன்களை மீள் கப்பலேற்றுதல் பற்றி ஏற்புடையதன்று.

5. இந்த அனுமதிப்பத்திரம் 2015 ஆம் ஆண்டின் சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் முறையற்ற மீன்பிடி நடவடிக்கைகளைத் நிறுத்துவதற்கு மற்றும் துறைமுக அரசின் நடைமுறை ஒழுங்குவிதியின் நியதிகளுக்கு மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

6. I ஆவது அட்டவணை - மீன் கப்பலேற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள டூனா மற்றும் டூனா வகைக்குரிய மீன்களின் விபரம் -

| மீன் இனங்கள் | மீன் கப்பல் ஏற்றுவதற்கான விடயம் | தொகை கி.கி/தொன் | மீன் கப்பல் ஏற்றும் திகதி |
|---|---|---|---|
| மஞ்சள் கோடு கெலவல்ல (Yellowfin tuna) | | | |
| கிளாவாலை (Bigeye tuna) | | | |
| பலயா (சூரை) (Skipjack tuna) | | | |
| கொப்பரா (Marlin) | | | |
| சுறா (Shark ) | | | |
| ஏனையவை | | | |

பணிப்பாளர் நாயகம்,
கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்.

திகதி :.............................

III ஆம் பகுதி

**இலங்கையில் பெயரிடப்பட்ட மற்றும் பிரகடனப்படுத்தப்பட்ட துறைமுகம் ஒன்றில் வெளிநாட்டு மீன் பிடிப்படகு ஒன்றிற்கு பராமரிப்பு மற்றும் சேவை வழங்குவதற்கான அனுமதிப்பத்திரம்**

1. ....................................................எனும் பெயருடைய........................................................................ பதிவு இலக்கம் கொண்டதும்.................... (இந்துனேசியா/தாய்வான்/ஜப்பான்/சீனா) மீன்பிடிப்படகுக்கு 201.............. ஆந் திகதி பராமரிப்பு நடவடிக்கைக்கு/பராமரிப்பு நடவடிக்கைக்காக நீர் அகற்றி படகு கட்டும் துறையில் படகு காயவிட/துறைமுக சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு மட்டும் திக்கோவிட்ட கடற்றொழில் துறைமுகத்துக்குள் நுழைவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2. இந்த அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட நபரினால் மட்டுமே பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன், அதனை வேறு எந்த ஒரு நபருக்கும் கைமாற்றப்படுதல் ஆகாது.

3. இந்த அனுமதிப்பத்திரம் இந்த விடயத்துக்காக குறிப்பிடப்பட்ட செயலுக்கு மட்டும் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன், இந்த அனுமதிப்பத்திரம் பயன்படுத்தும் துறைமுகத்தில் ஏதேனும் அல்லது மீன் தரையிறக்க முற்படுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

4. இந்த அனுமதிப்பத்திரம் ஏற்கனவே இரத்துச் செய்யப்படாவிடின் ,..................... 2015 ஆம் ஆண்டின் ஆரம்பமாகும்.................... திகதி வரை .................... காலத்துக்கு மட்டும் செல்லுபடியாதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்.

திகதி :.............................

## IV ஆவது அட்டவணை

துறைமுக அரசினை பரிசீலனை செய்யும் நடைமுறை

பரிசோதனை செய்பவரினால்

(அ) படகில் வைத்திருக்கும், படகினை இனம்காண்பதற்கான ஆவணம் மற்றும் படகின் உரிமையாளர் சம்பந்தமான தகவல்களின் உண்மைத் தன்மை, அதன் பூரணத்துவம், மற்றும் அது சரியானதாக உள்ளது என்பதை இயலுமான வரை உறுதி செய்யப்படல் வேண்டும். இதற்குத் தேவைப்படுமாயின், துறைமுக அரசுடன் உரிய முறையில் தொடர்புபடுத்திக் கொண்டு படகின் சர்வதேச அறிக்கை சம்பந்தமாக தேடிப்பார்க்கலாம். தெரிந்துகொள்ளல் ;

(ஆ) படகின் கொடி மற்றும் அடையாளம் இடல் (உதாரணமாக - பெயர், வெளிப்பதிவு இலக்கம், சர்வதேச சமுத்திர அமைப்பு (IMO) படகினை இனம் காண்பதற்கான இலக்கம், சர்வதேச வானொலி சமிக்ஞை குறியீடு, வேறு குறியீடுகள், நீளம் மற்றும் அகலம்) ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் அதனுடன் இணங்கி இருப்பதாக உறுதிப்படுத்திக் கொள்ளல் ;

(இ) மீன்பிடிப்பதற்கு மற்றும் மீன்பிடிப்பது சம்பந்தமான நடவடிக்கைக்கு வழங்கப்படும் அதிகாரத்தின் உண்மைத் தன்மை, அதன் பூரணத்துவம்சரியானவை என்பதை I ஆவது அட்டவணையின் மூலம்வழங்கப்பட்ட தகவல்களுக்கு அனுகூலமானது என்பதை இயலுமானவரை உறுதிப்படுத்திக் கொள்ளல் ;

(ஈ) இலத்திரனியல் தகவல், மற்றும் படகு கண்காணிப்புத் தொகுதி அடங்கியுள்ள கொடிக்குரிய அரசு மற்றும் இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவின் (IOTC) மத்திய நிலைய மற்றும் ஏனைய தொடர்புடைய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புகள் உட்பட படகில் உள்ள ஏனைய சகல தொடர்பு உடைய ஆவணங்கள் மற்றும் அறிக்கையை இயலுமானவரை உறுதி செய்து கொள்ளல், குறித்த அறிக்கையில் தரவுக் குறிப்பேடு (Log book) பிடிக்கப்பட்ட மீன்கள் சம்பந்தமான ஆவணத்தில் பிடிக்கப்பட்ட மீன்களை மீளக் கப்பலேற்றுதல், வர்த்தக நடவடிக்கைகள் சம்பந்தமான ஆவணங்கள், பணிக்குழுவினர் சம்பந்தமான பட்டியல், மீன்பிடி உபகரணங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது சம்பந்தமாக விபரம், படகில் வைத்திருக்கும் மீன்கள் சம்பந்தமான விபரம், அழிவுக்கு உட்படும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ள விலங்கினங்கள், தாவரங்கள் சம்பந்தமாக சர்வதேச வர்த்தக ஒப்பந்தத்திற்கு அமைவாக நடாத்துவதற்குத் தேவையான தகவல் அட்டவணை சம்பந்தப்பட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(உ) படகில் உள்ள சகல மீன்பிடி உபகரணங்களும்பார்வைக்கு உட்படாத வகையில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள கடற்றொழில் உபகரணங்கள் உள்ளடங்கலாக இயலுமான வரை அவற்றைப் பரிசீலனை செய்து அந்த உபகரணங்கள் அதற்கான அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக உள்ளதென உறுதி செய்துகொள்ளல் மீன்பிடி உபகரணங்களின் கண்ணளவு, நூல் அளவு, உபகரணங்கள் மற்றும் இணைப்புகள், வலைகளின் மற்றும் உபகரணங்களின் நீள, அகலம் மற்றும் தயாரிப்பு, பருமன், தூக்கும் கொழுக்கிகளின் அளவு மற்றும் எண்ணிக்கை குறித்த நிபந்தனைகளுக்கு அமைவாக உள்ளதெனவும் படகுக்கு அனுமதி வழங்கிய சம்பந்தபட்ட குறியீடுகள் இடப்பட்டுள்ளது என இயலுமான வரை பரிசீலனை செய்தல் ;

(ஊ) படகில் உள்ள மீன், மீன்பிடிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட முறையில் அறுவடை செய்யப்பட்டுள்ளதா என இயலுமான வரை தீர்மானித்தல் வேண்டும்.

(3 ஆவது ஒழுங்குவிதிகள்)

## V ஆவது அட்டவணை

இந்து சமுத்திர டூனா ஆணைக்குழு (IOTC) துறைமுகம் பரிசோதனை அறிக்கை மாதிரிப்படிவம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மதிப்பீட்டு அறிக்கை இல. : | | 2. துறைமுக அரசு | | |
| 3. | மதிப்பீட்டு அதிகாரி | | | | |
| 4. | பிரதான பரிசோதகரின் பெயர் | | அடையாள அட்டை இல. : | | |
| 5. | பரிசோதனை செய்யப்பட்ட துறைமுகம் | | | | |
| 6. | மதிப்பீடு ஆரம்பத்தில் | வருடம் | மாதம் | திகதி | மணி நேரம் |
| 7. | மதிப்பீடு நிறைவு செய்தல் | வருடம் | மாதம் | திகதி | மணி நேரம் |
| 8. | உயர் அறிவூட்டல் பெறப்பட்டுள்ளதா | உண்டு | | இல்லை | |
| 9. | என்ன காரணத்திற்கு | தரையிறக்க | மீள் கப்பல் ஏற்றல | பொதியிடல் | ஏனையவை |
| 10. | துறைமுக மற்றும் அரச மற்றும் துறைமுகத்துக்கு கடைசியாக வந்த திகதி | | வருடம் | மாதம் | திகதி |
| 11. | படகின் பெயர் | | | | |
| 12. | கொடிக்குரிய அரசு | | | | |
| 13. | படகின் வகை | | | | |
| 14. | சர்வதேச வானொலி அழைப்பு குறியீடு | | | | |
| 15. | ID பதிவு செய்த சான்றிதழ் | | | | |
| 16. | இருப்பின், சர்வதேச சமுத்திர நடவடிக்கை சம்பந்தமான அமைப்பின் படகு பதிவு செய்த இலக்கம் | | | | |
| 17. | இருப்பின், வெளிவாரி பதிவு செய்த இலக்கம் | | | | |
| 18. | பதிவு செய்யப்பட்ட துறைமுகம் | | | | |
| 19. | படகு உரிமையாளர் | | | | |
| 20. | தெரிந்திருப்பின் படகின் உரிமையாளரைவிட வேறு படகின் பயனடையும் உரிமையாளர் | | | | |
| 21. | படகின் உரிமையாளர் இல்லாதிருப்பின் படகின் இயக்குநர்/இயக்குநர்கள் | | | | |
| 22. | படகின் தலைவரின் பெயர் மற்றும் இனம் | | | | |
| 23. | மீன்பிடிக்கும் தலைவரின் பெயர் மற்றும் இனம் | | | | |
| 24. | படகின் முகவர் | | | | |
| 25. | படகு கண்காணிப்புத் தொகுதி | இல்லை | உண்டு : தேசிய | உண்டு: பிராந்திய கடற். முகாமைத்துவ அமைப்பு | வகை : |
| 26. | இந்து சமுத்திர ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சட்ட முறையான, அறிக்கையிடப்படாத வரும் படகு ஆவணங்களுக்கு உட்பட்டதாக இருக்கின்றதா போன்றவை | | | | |

| படகை அடையாளம்காணல் | பிராந்திய கடற். முகாமைத் துவ அமைப்பு | கொடிக்கு உரிய அரசின் நிலை | படகு மற்றும் அதிகாரம் வழங்கப்பட்ட படகின் பட்டியல் | சட்டமுறையாக, அறிக்கையிடப் படாத வரும் படகை பட்டியலில் உட்படுத்தல் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

V ஆவது அட்டவணை (தொடர்ச்சி)

27. அதிகாரம் வழங்கப்பட்ட குறித்த கடற்றொழில் நடவடிக்கை

| அடையாளம்காணல் | வழங்கப்பட்டவை | செல்லுபடியாகும் காலம் | மீன்பிடிக்கும் பிரதேசம் பிரதேசங்கள் | தேசிய இனம் | மீன்பிடி உபகரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

28. குறித்த மீன் கப்பலேற்றுவதற்கு வழங்கப்பட்ட அதிகாரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அடையாளம்காணல் | | வழங்கப்பட்டவை | | செல்லுபடியாகும் காலம் | |
| அடையாளம்காணல் | | வழங்கப்பட்டவை | | செல்லுபடியாகும் காலம் | |

29. முக்கியமாக மேற்கொள்ளப்படும் படகில் மீன்கப்பலேற்றுதல் சம்பந்தமான தகவல்

| பெயர் | கொடிக் குறிய அரசு | இனம் காணும் இல. | தேசிய இனம் | உற்பத்தி விடயம் | மீன்பிடிக்கும் பிரதேசம் | அளவு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

30. தரையிறக்கப்பட்ட பிடித்த மீன்களின் அளவின் மதிப்பீடு

| வகை | உற்பத்தி விடயம் | மீன்பிடிக்கும் பிரதேசம்/ பிரதேசங்கள் | பிரகடன அளவு | பிரகடன அளவு | தீர்மானிக்கப்பட்ட மற்றும் பிரகடனப்படுத்தபட்ட அளவு அத்துடன் வேறுபாடு இருப்பின் அதன் அளவு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

31. படகில் களஞ்சியப்படுத்தப்பட்ட பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு

| வகை | உற்பத்தி விடயம் | மீன்பிடிக்கம் பிரதேசம்/ பிரதேசங்கள் | பிரகடன அளவு | பிரகடன அளவு | தீர்மானிக்கப்பட்ட மற்றும் பிரகடனப்படுத்தப்பட்ட அளவு அத்துடன் வேறுபாடு இருப்பின் அதன் அளவு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

| | | | |
|---|---|---|---|
| 32. தரவுக் குறிப்பீடு (லொக்புக்) பரிசீலனை செய்தல் மற்றும் ஏனைய ஆவணங்கள் பரிசீலனை செய்தல் | உண்டு | இல்லை | கருத்து |
| 33. பிடிக்கும் மீன்களை அறிக்கைப்படுத்தும் முறையுடன் அமைவாக பரிசீலனை செய்தல் | உண்டு | இல்லை | கருத்து |
| 34. வியாபார தகவல் சேகரிக்கும் முறையுடன் அமைவாக | உண்டு | இல்லை | கருத்து |
| 35. பயன்படுத்தும் மீன்பிடி உபகரணம் முறை | | | |
| 36. அட்டவணை IV பிரிவுக்கு அமைவாக மீன்பிடி உபகரணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது | உண்டு | இல்லை | கருத்து |
| 37. பரிசோதகரினால் தேடப்பட்ட விடயங்கள் | | | |
| 38. குறித்த முறையான சட்ட ரீதியான அட்டவணையில் காணப்பட்ட மீறப்பட்டவை | | | |
| 39. படகுத் தலைவரின் கருத்துக்களில் காணப்பட்டவை | | | |
| 40. மேற்கொள்ளப்பட்ட வழி முறைகள் | | | |

| 41. படகுத் தலைவரின் கையொப்பம் | 42. பரிசோதகரின் கையொப்பம். |
|---|---|
| | |

*(12 ஆவது ஒழுங்குவிதிகள்)*

## VI ***ஆவது அட்டவணை***

**(IOTC)** *மீன் கப்பலேற்றுவதற்கான பிரகடனம்*

| பயணப் படகு | மீன்பிடிப்படகு |
|---|---|
| படகின் பெயர் மற்றும் வானொலி சமிக்ஞை குறியீடு : | படகின் பெயர் மற்றும் வானொலி சமிக்ஞை குறியீடு : |
| கொடி : | கொடி : |
| கொடிக்குரிய அரசின் அனுமதிப்பத்திர இல. : | கொடிக்குரிய அரசின் அனுமதிப்பத்திர இல. : |
| தேசிய பதிவிலக்கம் (இருப்பின்) : | தேசிய பதிவிலக்கம் (இருப்பின்) : |
| இந்து சமுத்திர டூனா ஆணைக்குழு (IOTC) பதிவிலக்கம் (இருப்பின்) :- | இந்து சமுத்திர டூனா ஆணைக்குழு (IOTC) பதிவிலக்கம் (இருப்பின்) :- |

| | திகதி | மாதம் | மணி நேரம் | வருடம் | | முகவரின் பெயர் | LSTV தலைவரின் பெயர் | படகை செலுத்தும் தலைவரின் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புறப்படுத்தல் | | | | முதல் | | | | |
| மீண்டும் வருகை | | | | வரை | | கையொப்பம் | கையொப்பம் | கையொப்பம் |
| மீன் கப்பலேற்றல் | | | | | | | | |

நிறை கிலோ கிராமில் மற்றும் பயன்படுத்தும் அலகு (உதாரணம் - பெட்டி, கூடை) மூலம் குறிப்பிடப்படும் தரையிறக்கல் ____ கிலோ கிராம்

| மீன் இனம் | துறைமுகம் | கடல் | உற்பத்தி வகை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மொத்த மீன் | உட்பகுதி அகற்றிய | தலை அகற்றிய | துண்டு வெட்டிய | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

மீன் கப்பலேற்றும் நடவடிக்கை கடலில் நடைபெற்று இருப்பின் **(IOTC)** பரிசோதகரின் பெயர் மற்றும் கையொப்பம்.

*4-396/2*